DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

*******

IN THE COURT OF DISTRICT MUNSIF–CUM–JUDICIAL MAGISTRATE,

**PALLAVARAM.**

| | |
|---|---|
| STC.No. | 218/2023 |
| Prosecution: | அ.சா. |

| | | |
|---|---|---|
| **Deposition of witness for Name** | ~ | மணிவண்ணன் |
| **Father Name** | ~ | காசி |
| **Village** | ~ | |
| **Taluk** | ~ | |
| **Caste** | ~ | |
| **Calling** | ~ | |
| **Religion** | ~ | |
| **Age** | ~ | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 on the day **of Dt. 24.07.2025.**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். எதிரி தீபா என்பவரை எவ்வளவு நாட்களாக தெரியும் என்றால் 2016 முதல் தெரியும். எதிரியை எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் நான் லெதர் எக்ஸ்போர்ட் நிறுவனம் நடத்தி வந்தேன். எதிரி விமானத்தில் பொருட்களை ஏற்றுமதி செய்யும் கூட்ஸ் நிறுவனம் நடத்தி வந்தார். அதனடிப்படையில் எதிரியை எனக்கு தெரியும். நானும் எதிரியும் குடும்ப நண்பர்களாக பழகி வந்தோம் என்றால் இல்லை. எதிரி என்னிடம் ரூ.44,00,000/– பெற்றதற்கான ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளார். மேற்படி ரூ.44,00,000/–த்தை எதிரிக்கு மொத்தமாக ஒரே தவணையாக கொடுத்தீரா என்றால் 4 தவணைகளாக கொடுத்தேன். மேற்படி ரூ.44,00,000/–தொகையை 4 தவணைகளாக எதிரிக்கு கொடுத்ததாக நான் தாக்கல் செய்த புகார் மனுவிலும் வழக்கறிஞர் அறிவிப்பிலும்

சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. ஆனால் தவணை முறையில் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேன்.

மேற்படி ரூ.44,00,000/- தொகையை ரொக்கமாக கொடுத்தீரா என்றால் ரூ.30,00,000/- வங்கி பரிவர்த்தனை மூலம் கொடுத்துள்ளேன். இதர ரூ.14,00,000/- ரொக்கமாக கொடுத்துள்ளேன். எதிரியிடம் தனிப்பட்ட முறையில் மேற்படி தொகை பெற்றதற்காக ஆவணம் எழுதி பெற்றுள்ளீரா என்றால் கடனுறுதி சீட்டு தாக்கல் செய்துள்ளேன். மேற்படி கடனுறுதி சீட்டை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளீரா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்த கடனுறுதி சீட்டை இவ்வழக்கில் சான்றாவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் குறியீடு செய்யப்படவில்லை. ஆனால் நான் தாக்கல் செய்துள்ளேன்.

நான் எதிரிக்கு ரொக்கமாக ரூ.10,00,000/- கொடுத்திருந்ததாக வழக்கறிஞர் அறிவிப்பிலும் புகார் மனுவிலும் பிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளேன். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் ரூ.10,00,000/- ரொக்கமாக கொடுத்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி 10,00,000/- தொகைக்கு தனிப்பட்ட முறையில் ஆவணம் எழுதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை மொத்தமாக எழுதி பெற்றுள்ளேன். வெங்கட் லெதர் எக்ஸ்போர்ட் என்ற நிறுவனம் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில் தான் உள்ளது. அந்த நிறுவனத்தை நான் 12 ஆண்டுகளாக நடத்தி வருகிறேன். மேற்படி நிறுவனத்திற்கு ஆண்டுதோறும் வருமானவரி கணக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2016 முதல் 2017 ஆண்டிற்கு எனது நிறுவனத்திற்கு வருமான வரி கணக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ரூ.20,00,000 தொகைக்கு தாக்கல் செய்துள்ளேன். ரூ.10,00,000 தொகைக்கு தனியாக தாக்கல் செய்துள்ளேன். 2016-2017 ஆண்டிற்கான வருமானவரி கணக்கை இவ்வழக்கில் தாக்கல் செய்தீரா என்றால் இதன் பின்னிட்டு தாக்கல் செய்வேன். எதிரி என்னிடம் ரூ.44,00,000 தொகை பெற்றுக் கொண்டு திருப்பி செலுத்தாதது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளீரா என்றால் கொடுத்துள்ளேன். பிறகு போலிசார் நீதிமன்றத்தில் விசாரணை செய்ய வேண்டும் என சொல்லி விட்டார்கள்.

எந்த தேதியில் யாரிடம் புகார் கொடுத்தேன் என்றால் நினைவில்லை. தாம்பரம் காவல் துணை ஆணையரிடம் புகார் மனுவை எந்த வருடத்தில் புகார் கொடுத்தீர் என்றால் எந்த வருடம் என்று தற்போது எனக்கு தெரியவில்லை. ஆவணம் பார்த்துதான் சொல்ல முடியும். எதிரிக்கும் எனக்கும் தனிப்பட்ட முறையில் நெருங்கிய தொடர்பு இருந்தது தொடர்பாக கொடுக்கப்பட்ட புகார் என்றாலும் காசோலை தொகை சம்பந்தமாக எந்தவித புகார் மனுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. நானும் எதிரியும் நெருங்கிய உறவு முறை என்றாலும் இருவரும் குடும்ப நிகழ்ச்சிகளுக்கு சென்று வருவது வழக்கம் என்றால் நானும் சென்றதில்லை. எதிரியும் என்னை எதற்கும் அழைத்ததில்லை. எதிரி எனது குடும்ப நிகழ்ச்சிகளுக்கு வந்து செல்வது வழக்கம் என்றால் இல்லை. நான் எந்த நிகழ்ச்சிக்கும் அழைத்தது கிடையாது.

எதிரி எனது நிறுவனத்திற்கு அனுப்பிய ரசீதுகளில் அவரது கையொப்பம் எனக்கு நன்கு பரிட்சயமானவை என்றால் அது பற்றி தற்போது நினைவில்லை. எதிரி நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்கள் யார் வேண்டுமானாலும் கையொப்பம் செய்து அனுப்பி இருக்கலாம். ஆனால் எதிரியின் கையொப்பம் எனக்கு பரிட்சயம் கிடையாது. எதிரி நடத்தி வந்த நிறுவனத்தினரிடமிருந்து எனது நிறுவனத்திற்கு இடையே செக்யூரிட்டிக்காக காசோலைகள் பரிமாற்றம் செய்து கொள்ளப்பட்டது என்றால் இல்லை. எதிரியிடம் கொடுத்த தொகையை வாட்ஸ் அப் மூலமாக திருப்பி செலுத்துமாறு கேட்டுள்ளீரா என்றால் கேட்டுள்ளேன். ஆனால் அவர் பல்வேறு பதில்களை சொல்லி தொகையை திருப்பி செலுத்தவில்லை.

நான் எதிரிக்கு எவ்வித கடன் தொகையும் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி நிறுவனத்திற்கு தான் கடன் தொகை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி பணியாற்றி வந்த ஷிப்பிங் சர்வீஸ் நிறுவனத்திற்கு தொகை செலுத்தியதற்கான ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. நான் எதிரி பணிபுரிந்த SL ஷிப்பிங் நிறுவனத்திற்கு கொடுக்க வேண்டிய தொகையை தான் எதிரியிடம் கொடுத்துள்ளேன் என்றால் இல்லை. நான் அவ்வளவு தொகைக்கு ஷிப்பிங் நிறுவனத்திடம் பரிவர்த்தனை செய்யவில்லை. எதிரி SL ஷிப்பிங் நிறுவனத்தில் பணியாற்றி வந்தபோதுதான் மேற்படி தொகையை கொடுத்துள்ளேன் என்றாலும் எதிரி அந்நிறுவனத்தில் இருந்து வெளியேறிய பின்னிட்டு எவ்வித தொகையும் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

மேற்படி எதிரிக்கு கடன் கொடுத்த விவரம் எதிரி பணியாற்றி வந்த நிறுவனத்தின் உரிமையாளருக்கு தெரியும். அதன் பின்னிட்டு தான் எதிரி அவரது பணியில் இருந்து வெளியேற்றப்பட்டார். 07.09.2017 அன்று எதிரி என்னிடம் எவ்வித உறுதி மொழி கடிதமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரி தனது கைப்பட எழுதி கொடுத்துள்ளார்.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் முறையீட்டிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.